ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අතිවිසේෂමානது

අංක 1981/87 - 2016 අගෝස්තු මස 26 වැනි සිකුරාදා - 2016.08.26

*1981/87 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரிக் கட்டளைச் சட்டம் (52 ஆம் அத்தியாயம்)**

மதுவரி அறிவித்தல் இல. 989

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 22 ஆம் பிரிவினால் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், 2016.09.01 ஆந் திகதி முதல் பயன்வலுப் பெறும் வகையில் விற்பனை செய்வதற்காக இறக்குமதி செய்யப்படுகின்ற வெளிநாட்டு மதுபானம் தொடர்பில் கீழ் குறிப்பிடப்படும் ஒழுங்கு விதிகள் பிரகடனப்படுத்தப்படுவதுடன், குறித்த மதுபானம் தொகை லீற்றர் ஒன்றுக்காக கீழ் குறிப்பிடப்படும் மதுவரி அறவீடு விதிக்கப்படுதல் வேண்டுமெனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

| | | | |
|---|---|---|---|
| (i) | வெளிநாட்டு மாவூறல் மதுசாரத்திற்காக | ரூபா | 50.00 |
| (ii) | வெளிநாட்டு வைன் வகைகளுக்காக | ரூபா | 100.00 |
| (iii) | (i) மற்றும் (ii) இல் உள்ளடக்கப்படாத வேறு ஏதேனும் வெளிநாட்டு மதுபான வகைகளுக்காக | ரூபா | 200.00 |

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01.
2016.08.25.

**ஒழுங்கு விதிகள்**

1. வெளிநாட்டு மதுபானத்தினை இறக்குமதி செய்ய விரும்புகின்ற ஆள் ஒருவர், அவர் இங்கு, அட்டவணை I இற்கு அமைய, விண்ணப்பப்படிவம் ஒன்றினை மதுவரி ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

2. விண்ணப்பதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் தொடர்பில் மதுவரி ஆணையாளர் நாயகம் திருப்தியுறும் பட்சத்தில், அவர் இங்கு அட்டவணை II இல் காட்டப்பட்டுள்ள படிவத்திற்கு அமைய, தமது அங்கீகாரத்தினை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளருக்கு வழங்குதல் வேண்டும்.

3. விண்ணப்பதாரரினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவம் தொடர்பில் மதுவரி ஆணையாளர் நாயகம் திருப்தியுறாத பட்சத்தில், குறித்த விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்று ஐந்து நாட்களினுள் குறித்த விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்பட்டமைக்கான காரணத்தினை விளக்கி மதுவரி ஆணையாளர் நாயகம் விண்ணப்பதாரருக்கு அறிவித்தல் வேண்டும்.

4. வெளிநாட்டு மதுபானம் சுங்கத் திணைக்களத்திற்கு வந்தடைந்ததும், இங்கு அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறான கடிதமொன்றினை, வெளிநாட்டு மதுபானங்களை விடுவிப்புச் செய்வதற்காக சுங்க பணிப்பாளர் நாயகத்தினால் மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

5. மதுவரி தொடர்பான கட்டணங்கள் யாவும் செலுத்தப்பட்டவுடன், மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் மதுவரி இறக்குமதிக்கான உரிமம் மற்றும் அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானங்களை இடம்பெயர்ப்பதற்கான அனுமதிப் பத்திரம் என்பவற்றினை இங்கு, அட்டவணை IV மற்றும் V ஆம் அட்டவணையிலுள்ள படிவங்களுக்கு அமைய வெளியிடுதல் வேண்டும்.

6. மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட மதுவரி இறக்குமதிக்கான உரிமத்தினை அவ்விடத்தில் மதுவரி உத்தியோகத்தரினால் தேவைக்கேற்ப பரிசோதிக்கப்படும் போது உடனடியாக சமர்ப்பிக்க தயாராக இருத்தல் வேண்டும்.

**அட்டவணை I**

மதுபான இறக்குமதிக்கான விண்ணப்பப்படிவம்

விண்ணப்ப இல.

1. விண்ணப்பதாரரின் பெயர் :-----.
2. தேசிய அடையாள அட்டை இல. :-----.
3. தொலைபேசி இல. :-----.
4. மின்னஞ்சல் :-----.
5. முகவரி :-

   தனிப்பட்ட முகவரி :-----.

   வியாபார முகவரி :-----.
6. உரிமமளிக்கப்பட்ட பிரதேசத்தின் பெயர் :-----.
7. உரிமமளிக்கப்பட்ட பிரதேசத்தின் முகவரி :-----.
8. மதுபானத்தினை இறக்குமதி செய்ய உத்தேசிக்கப்படும் நாடு :-----.
9. மதுபானத்தினை உற்பத்தி செய்கின்ற நாடு :-----.

   (முன்னீடான பொருள் விபரப்பட்டியல் இணைக்கப்படுதல் வேண்டும்)
10. இறக்குமதி செய்யப்பட வேண்டிய ஈதைல் மதுபானத்தின் தொகை, லீட்டர்களின் அளவு :-----.
11. எந்த நாட்டிலிருந்து மதுபானம் இறக்குமதி செய்யப்பட வேண்டுமோ அந்த நாட்டில் இயைபான மதுபான ஆய்வு அறிக்கை (ஆய்வு அறிக்கை இணைப்படுதல் வேண்டும்)
12. மதுபானம் இறக்குமதி செய்வதற்காக உத்தேசிக்கப்படும் திகதி :-----.

------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

---

**அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம் :-**

நிபந்தனைகள் எவையேனுமிருப்பின் :-----.
இரத்துச் செய்யப்படுவதற்கான காரணம் :-----.

மதுபானத்தினை இறக்குமதி செய்வதற்கான அனுமதி அளிக்கப்பட்டது/ அளிக்கப்படவில்லை/ அனுமதியானது மேலேயுள்ள நிபந்தனைகளுக்கமைய அளிக்கப்பட்டது.

..................
கையொப்பமும் திகதியும்,
மதுவரி ஆணையாளர் தலைமையதிபதி.

**அட்டவணை** II

விண்ணப்ப இல. :

மதுவரி தலைமை அலுவலகம்.

இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர்,
இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்,
கொழும்பு.

மதுபானத்தினை இறக்குமதி செய்தல்

...................................... (முகவரி) வசிக்கும் ..................... தேசிய அடையாள அட்டை இலக்கத்தினைக் கொண்ட ..................... (முழுப்பெயர்) என்பவருக்கும் இங்கு கீழ்குறிப்பிடப்படும் மதுபானத்தின் அளவினை இறக்குமதி செய்வது தொடர்பில் அங்கீகாரத்தினை வழங்குமாறு வேண்டுகோள் விடுப்பதுடன், அதனை இறக்குமதி செய்து இலங்கைக்கு கொண்டு வந்ததன் பின்னர் சுங்கத் திணைக்களத்தினால் விடுவிப்புச் செய்யப்படுவதற்கு முன்னர் மதுபானம் தொடர்பிலான இறக்குமதி மதுவரியினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

முன்னீடாக பொருள் விபரப்பட்டியல் :-----.

தொகை லீட்டர்களின் எண்ணிக்கை :-----.

செல்லுபடியாகும் காலம் :-----.

.....................
மதுவரி ஆணையாளர் தலைமையதிபதி.

திகதி :-----.

**அட்டவணை** III

மதுவரி ஆணையாளர் நாயகம்,
மதுவரி தலைமை அலுவலகம்,
கொழும்பு.

மதுபானத்தினை இறக்குமதி செய்தல்

இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரது இல. ......... உரிமப் பத்திரத்தின் கீழ் .......................... வசிக்கும் .............. தேசிய அடையாள அட்டை இலக்கத்தினைக் கொண்ட.................... (முழுப்பெயர்) என்பவரால் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட மதுபானம் தொகை அளவினை ............... (லீற்றர்) விடுவிக்க ஆயத்தமாக உள்ளோம் எனவும் அதற்காக அங்கீகாரத்தினை வழங்குமாறும் வேண்டுகோள் விடுக்கிறேன்.

கொள்கலன் இல. :-----.
அளவு தொகை லீட்டர் :-----.
வேறு ஏதேனுமிருப்பின் :-----.

.........................
அதிகாரமளிக்கப்பட்ட சுங்க அலுவலகரின் கையொப்பம்,
உரிமத்தின் இல. :-----.

திகதி :-----.

**அட்டவணை** IV

மதுபான இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரம்

விண்ணப்பப்படிவ இல. :-----.

1. விண்ணப்பகாரர்/தாபனத்தின் பெயர் :-----.
2. தேசிய அடையாள அட்டை இல. :-----.

3. முகவரி :-
தனிப்பட்ட முகவரி :-----.
வியாபார முகவரி :-----.
4. தொலைபேசி இல. :-----.
5. மின்னஞ்சல் :-----.
6. எந்நோக்கத்திற்காக உரிமம் நாடப்படுகின்றதோ அந்நோக்கம் :-----.
7. இறக்குமதி செய்யப்பட வேண்டிய பொருட்களின் விபரங்கள் :-----.

| கொள்கலன் இல. | மதுபான வகைகள் | செறிவு | தொகை லீற்றர் அளவு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

8. போகும் வழி :-----.
9. மதுபானத்தினை எடுத்துச் செல்லும் இடத்தின் பெயரும் முகவரியும் :-----.
10. நேர காலம் :-----.
11. வேறு ஏதேனுமிருப்பின் :-----.
12. திகதி :-----.

................................
அங்கீகரிக்கப்பட்ட மதுவரி உத்தியோகத்தர்.

## அட்டவணை V

மதுபானத்தினை இடம் பெயர்த்தலுக்கான அனுமதிப்பத்திரம்

விண்ணப்பப்படிவ இல. :-----.

1. உரிமத்தினை வைத்திருப்பவரின் பெயர் :-----.
தேசிய அடையாள அட்டை இல. :-----.
முகவரி :-----.
தனிப்பட்ட முகவரி :-----.
வியாபார முகவரி :-----.
தொலைபேசி இல. :-----.
மின்னஞ்சல் :-----.
2. சாரதியினுடைய பெயர் :-----.
தேசிய அடையாள அட்டை இல. :-----.
முகவரி :-----.
தொலைபேசி இல. :-----.
3. உரிமப்பத்திர இடம், முகவரி :-----.
4. மதுபானத்தின் வகை :-----.
5. செறிவு :-----.
6. அளவு :-----.
7. போகும் வழி :-----.
8. கால எல்லை :-----.
9. வேறு ஏதேனுமிருப்பின் :-----.
10. திகதி :-----.

நிபந்தனைகள் ஏதேனுமிருப்பின் ..................................................................................................................
..................................................................................................................................................
மதுபானம் இடம்பெயர்விற்காக அனுமதியானது மேலேயுள்ள நிபந்தனைகளுக்கமைய அளிக்கப்பட்டுள்ளது.

..................................
கையொப்பமும் திகதியும்,
மதுவரி ஆணையாளர் நாயகம்.

9-469

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.